**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.33/2024

வாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 28.10..2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.1– ஒண்டிமுத்து த/பெ பழனியாண்டி</u>**
**<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. 1ம் பிரதிவாதி தமிழரசனின் தந்தை பெயர் தெரியாது. 2ம் பிரதிவாதி மோகன் ராஜ் எங்கு குடியிருக்கிறார் என்றால் புலியூரில் குடியிருக்கிறார். வழக்கு தாக்கல் செய்த சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 245/32 என்ற எண்ணில் உள்ளது. பழைய சர்வே எண். 245/6 ஆகும். சர்வே எண். 245/6 மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 7 1/4 செண்ட் ஆகும். சர்வே எண். 245/6 மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 7 1/4 செண்ட் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தமிழரசனின் அப்பா பெயரில் உள்ள பட்டா எண்.14 தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் யாரிடம் விலைக்கு வாங்கியுள்ளேன் என்றால் முருகேசன் என்பவரிடம் விலைக்கு வாங்கியுள்ளேன். முருகேசன், யாரிடம் வாங்கினார் என்றால் தமிழரசன், மோகன்ராஜ் ஆகியோர்களிடம் கிரையம் வாங்கியுள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–1 ஆவணத்தில் எனக்கு பூர்வீகமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்த போது என்ன நடந்தது என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். முருகேசன் என்பவர் தமிழரசன் என்பவருக்கு என்ன உறவு முறை என்றால் எனக்குத் தெரியாது.

3. வா.சா.ஆ.1 அசல் பத்திரம் எங்குள்ளது என்றால் முருகேசன் தொலைந்துவிட்டதாக சொன்னார். வா.சா.ஆ.2 பத்திரத்தில் மூலப்பத்திரம் அசல் தொலைந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முருகேசன் கிரையவாங்கிய பத்திரத்தின் அடிப்படையில் எனக்கு முருகேசன் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 நகல் பத்திரத்தை வைத்து தான் வா.சா.ஆ.2 கிரையப்பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்திற்கும் வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்திற்கும் சொத்து விவரத்தில் உள்ள நான்கெல்லை வேறுபட்டுள்ளது என்றால் சரிதான் நாங்கள் வாங்கும் போது இருந்ததை குறிப்பிட்டுள்ளோம்.

4.  வா.சா.ஆ.2 பத்திரம் பதிவு செய்யும் போது அதிலுள்ள நான்கெல்லை தான் இருந்தது என்பதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் இல்லை. முருகேசன் சொன்னப்படி வா.சா.ஆ.2 பத்திரத்தில் நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அங்குள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 பத்திரத்தில உள்ள விவரங்கள் சரி அல்லது தவறு என்று முருகேசன் சொன்னரா என்றால் நான்கெல்லை மாற்றம் இருப்பதாக சொன்னார் பத்திரத்தில் சரியாக உள்ளது.

5.  நான் சொன்ன 7 1/2 செண்ட் க்கு நான்கெல்லை எனக்குத் தெரியாது. முருகேசன் வாங்கிய வா.சா.ஆ.1 பத்திரத்தில் தெற்குப்பக்கம் பாப்பம்மாள் பாகம் வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இருக்கும். வா.சா.ஆ.2 பத்திரத்தில் தெற்குப்பக்கம் கிழமேல் ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாப்பம்மாள் பாகத்திற்கு தெற்குத்தான் கிழமேல் ரோடு என்றால் சரிதான்.

6.  வா.சா.ஆ.1 பத்திரத்தில் கிழ்புறஅத்தாக 3 அடி அகல தென்வடல் பாதை என உள்ளதா என்றால் சரிதான். நான் வாங்கிய வா.சா.ஆ.2 பத்திரத்தில் கிழபுறம் பெருமாள் சொத்து உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்தில் மேற்குப்பக்கம் மனோகரன் பாகவீடு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பத்திரத்தில் மேற்குப்பக்கம் பாப்பம்மாள் வீடு என்று உள்ளது என்றால் சரிதான். முருகேசன் உள்ளூரில் உள்ளரா என்றால் குன்னுடையான்கவுண்டன்பட்டி என்ற ஊரில் உள்ளார்.

7.  வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் முருகேசன் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு எந்த பகுதியும் சுவாதீனத்தில் விடவில்லை என்றால் சரியல்ல. 7 1/2 செண்ட்டில் எந்த பகுதியில் வீடு உள்ளது என்றால் 3 வீடுகள் உள்ளது. நான் வாங்கிய வா.சா.ஆ.2 பத்திரத்தில் காலி மனை தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 7 1/2 செண்ட்டில் 3 வீடு உள்ளது 3 வீடுகளின் கதவு எண், மின்இணைப்பு எண் தெரியாது.

8.  முருகேசன் எனக்கு வேண்டியவர் என்பவதால் வா.சா.ஆ.2 பத்திரத்தில் அவருக்கு இல்லாத பாத்தியத்தை எனக்கு தவறாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 உரிமைமூலம் (title)ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 7 1/2 செண்ட்டில் உள்ள வீட்டு பகுதியை யார் யார்

அனுபவம் செய்கிறார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. எதற்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் கிரைய வாங்கிய சொத்தை பராமரிக்கும் போது இடையூறு செய்ததால் வழக்கு போட்டுள்ளேன்.

9. நான் வாங்கிய சொத்தின் கிழமேல், தென்வடல் அளவு தெரியாது மொத்தம் 1 1/2 செண்ட் வாங்கினேன். சொத்தை வாங்கும் போது அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை முருகேசனும், நானும் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றாலும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ள சொத்தை அபகரிப்பதற்காக வா.சா.ஆ.2 ஆவணத்தை நானும், முருகேசனும் சேர்ந்து தவறாக தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. நான் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மேற்படி குறுக்கு விசாரணை முழுவதையும் 1ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.